# விண்ணொளி

தென் இந்தியத் திருச்சபை
யாழ்ப்பாணப் பேராய
கொழும்புத் திருச்சபையின் சஞ்சிகை



மலர் : 48
இதழ் : 02
18-08-2002

"The Vinnoli"
J.D ; C.S.I.
Colombo Church


சபைப் போதகரிடமிருந்து,

## இலங்கையில் திருச்சபை ஒற்றுமை

இலங்கையிலே திருச்சபை ஐக்கியம் ஏற்பட வேண்டுமென்று கொழும்பு அங்கிலிக்கன் பேராயர் அதி. வண. டியூலிப் சிக்கேரா பேசி வருகின்றார். இம் மாதம் (ஜுலை) 15ம், 16ம் திகதிகளில் சுன்னாகம் கிறிஸ்த சேவா ஆச்சிரமக் கூட்டங்களில் மாண்பு மிகு கொழும்பு பேராயர் இதனையே வலியுறுத்தியதாகத் தெரிகிறது.

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "நாம் ஒன்றாய் இருக்கிறது போல அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி" தமது பிரியா விடை பிரதான ஆசாரியன் ஜெபத்தில் குறிப் பிட்டிருந்தார்.

திருச்சபை ஒற்றுமைப்படாமலிருப்பது கடவுளுக்கு எதிரான ஒரு பாவமென்பதனை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஆனால் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம் இதைக் குறித்து ஜாக்கிரதையாக இருந்தால் முன்னர் ஏற்பட்ட அவமானங்கள் திரும்பவும் ஏற்படமாட்டாது. 1970 களில் திருச்சபை ஐக்கியம் உண்டாகிவிட்டது போல் தென்பட்டது. ஆனால் அந்த ஐக்கிய திட்டத்திற்கு எதிராக சில அங்கிலிக்கன் சபையினர் வழக்கு தொடுத்தமையினால் அத்திட்டம் கைவிட வேண்டியதாயிற்று. இதனால் பெரிதும் நஷ்டம் அடைந்தது தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீன மேயாகும். ஏனெனில் நமது ஆதீனமே இலங்கையில் முதல் முதல் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை அங்கீகரித்து, பின்னர் ஒவ்வொரு திருத்தத்தையும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டது. தன்னால் இயன்ற அளவுக்கு திருச்சபை ஒருமைப்பாட்டு இயக்கத்துக்கு ஆதரவு அளித்தது. ஆனால் கொழும்பிலிருந்த சில அங்கிலிக்கன் அதீட்சகர்கள் இதற்கான தடை உத்தரவை அரசாங்க நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொண்டனர்.

ஆகையினாலேயே நாம் இப்பொழுது திருச்சபை ஒருமைப்பாட்டினை மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்தல் வேண்டும்.ஏனெனில் ஒரு முறை நாம் அளவுக்கதிகமாக இந்த ஒருமைப்பாட்டை மிகுந்த ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டோம். ஆனால் நமது திருச்சபையோடு சேர்வதனை தென்னிலங்கை வாழ் பல பெரும்பான்மை இனக் கிறிஸ்தவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் நமது சபை எப்பொழுதும் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும், அடக்கப்பட்டவர் களுக்காகவும், குரல் கொடுத்து வந்தது. இப்பொழுதும் பல அங்கிலிக்கன் சகோதரர்களும், மெதடிஸ்த சகோதரர்களும், இதனை விரும்பாது இருப்பது கண்கூடு.

ஆகவே இந்தச் சூழலில் நாம் செய்யக்கூடிய புத்தியுள்ள செயற்பாடு எப்படியானது? ஒருபுறம் திருச்சபை ஒருமைக்காக நாம் பாடுபடவேண்டும். மறுபுறம் எமது ஆதீனத்தின் பெருமையைக் குறைப்பதற்கு நாம் உந்துதல் அளித்ததாக இருக்கக்கூடாது. ஆகவே இத்தகைய சூழலில் நாம் செய்வது என்ன? திருச்சபை ஒருமைப்பாட்டு இயக்கத்தை நாம் ஆதரித்தல் அவசியமாகும். அதே சமயம் இலங்கையில் பணியாற்றும் ஏனைய புரட்டஸ்தாந்து சபைகள் முதலில் ஒற்றுமைப்பட வேண்டும். அதன் பின்னர் நமது சபைக்கு வேண்டுகோள் விடுத்தால் நாம் அதனைப் பக்தியோடும் மிகுந்த தாழ்மையோடும் பரிசீலனை செய்ய வேண்டும். அதுமட்டுமன்றி அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் குரலாக இன்றுவரை ஒலித்துக் கொண்டிருக்கும் நமது திருச்சபைக்கு, இந்த ஐக்கியம் நன்மை அளிக்குமா அல்லது கேடு விளைவிக்குமா என்று பார்க்க வேண்டும்.

இன்றும் நமது தேசியப் பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வு எட்டப்படவில்லை. இச் சூழலில் நாம் எமது சுதந்திரத்தைக் கைவிட்டு ஒரு தென்னிலங்கை அமைப்புக்குக் கீழ் வருவது நல்லதுதான் என்பதனையும் எண்ணிப் பார்த்தல் மிகவும் அவசியமாகும்.

*சபைப் போதகர் வண. பொ. ஜெ.நவேந்திரானுகூலன்*

# இயேசுவின் பெண் சீடர்கள்

*(லூக்கா 8:1-3)*

*- திருமதி தயா தியாகராஜா*

கிறிஸ்து தனது உலக ஊழியத்தில் தனது உதவியாளர்களாக பன்னிரண்டு ஆண் சீடர்களைத் தெரிந்து கொண்டார் என்பதை அறிவோம். அவரது பிரதான சீடனெனப்படக்கூடிய சீமோன் பேதுருவில் ஆரம்பமாகி அவரைக் காட்டிக் கொடுத்தவனாகிய யூதாஸ் வரை அவர்களின் பெயர்கள் நற்செய்தி நூல்களில் எழுதப்பட்டு இருக்கிறது. ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சேர்ந்து படிக்கும் ஒய்வு நாட் பாடசாலைகளிலும் இப் பிரதிமையின் காட்சி பிள்ளைகள் முன் வைக்கப்படுகின்றது. எமது திருச்சபைகளில் கற்பிக்கப்படுபவையும், வேதப் படிப்புகளும் கிறிஸ்துவின் நெருங்கிய வட்டத்தில் ஆண்கள் மட்டுமே இருந்தனர் என்பது போன்ற ஒரு தோற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன.

கிறிஸ்துவின் ஊழியத்தில் பெண்களும் முக்கிய பங்கேற்ற பல இடங்களும் சந்தர்ப்பங்களும் இருப்பது உண்மையே. பன்னிரண்டு கோத்திரங்கள் என்பது ஆதிக் கிறிஸ்தவ சபைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இரட்சிப்பானது யூதருக்கூடாகவே வரும் என்பதைக் காட்டுவதற்கே இது தேவைப்பட்டது. ஆனால், ஆதிச் சபையில் பெண்களின் பங்களிப்பு எவ்விதமாயமைந்தது என்பதை ஆராய விரும்பிய பெண்ணிய இறையியலாளர்கள் பெண்களின் பெயர்கள் மட்டுமாவது குறிப்பிடப்பட்டிருக்கும் திருமறைப் பகுதிகளை ஆராய்ந்தனர். அவர்களது விரிவான படிப்பின் மூலம் கிறிஸ்துவின் ஊழியத்தில் மிக முக்கியமான பங்காற்றிய பெண் சீடர்களும் அவருக்கு இருந்தனர் என்ற உண்மையை அவர்கள் நிரூபித்துள்ளனர்.

லூக்கா நற்செய்தியாளர் முக்கியமான சில பெண் சீடர்களைப் பற்றி எழுதியிருக்கிறார். லூக்கா 8:1–3 இல் (கிரேக்க பாஷையில் இது ஒரு நீண்ட வசனம்) முதலில், இயேசுவுடனும் பன்னிருவருடனும் ஊர் ஊராய்ச்சென்று நற்செய்தியைப் எடுத்தியம்பிய பெண்களைப் பற்றிக் கூறப்படுகிறது. அடுத்து இயேசுவின் பணிக்கு நிதி உதவி செய்ததாகக் குறிப்பிடப்படும் பகுதி காணப்படுகிறது. இத் திருமறைப் பகுதியானது (லூக்கா 8:1–3) இயேசுவின் பன்னிரு சீடர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டதைத் தொடர்ந்து (6:12–16) நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிய பதிவுகளுக்குள் வருகிறது. லூக்கா 6:12–16 க்குப் பின்னர் அடுத்து பன்னிருவரைப் பற்றிக் குறிப்பிடப்படும் இப்பகுதியில் (8:1–3) அவர்களோடு இணைந்து செயற்பட்ட ஒரு குழுப் பெண்களைப் பற்றிக் குறிப்பிடப்படுவதைக் கவனிக்க வேண்டும். மூவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும், அவர்களில் பல பெண்கள் இருந்தனர் என லூக்கா குறிப்பிடுகிறார்.

இப் பெண்கள் இயேசுவின் பணியில் தற்காலிக ஆர்வங்கொண்ட ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்ல. இயேசுவின் ஊழிய காலத்தில் அவர்களது தொடர்ச்சியான ஈடுபாட்டையும் பங்களிப்பையும் நாம் காண்கிறோம். லூக்கா குறிப்பிடுவதன்படி இப்பெண்கள் பூரண சுதந்திரமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் தமது வீட்டையும், குடும்பத்தையும் விட்டு இயேசுவுடன் ஊர் ஊராகச் செல்கிறார்கள் எனக் காண்கிறோம். பென் வித்தரிங்டன் எனும் இறையியலாளர், இயேசு தாம் உலகில் ஊழியஞ் செய்த காலத்தில் ஆரம்ப முதலே தனது பணியில் பெண்கள் சாட்சிகளாகவும் பங்காளிகளாகவும் இருக்க இடமளித்திருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளார். மகதலேனா மரியாள், ஏரோதுவின் வீட்டு நிர்வாகியான கூசாவின் மனைவியாகிய யோவன்னாள் ஆகியோர் இப் பெண்களில் முக்கிய மானவர்கள். வீட்டு நிர்வாகியானவன் தனது எஜமானின் வீட்டுடமைகள், விளைநிலங்கள் அனைத்தையும் நிர்வகிப்பவனாவன். அவ்வாறான ஒரு குடும்பத்தைச் சேர்ந்த யோவன்னாள் ஒரு மதிப்புள்ள உயர் குடிமகளாகவே இருந்திருப்பாள். மேலும் தனது செயல்களினால் அவள் பிரபலமடைந்தவளாகவுமிருந்தாள்.இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மற்றுமொரு பெண்மணி சூசன்னாள். சூசன்னாள் என்பது ஒரு எபிரேயப் பெயர். ஆக, இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் தமது சமூக மேன்மைகளையும், உயர் நிலையையும் விட்டு இயேசுவின் ஊழியத்துடனும், ஆதிக் கிறிஸ்தவ இயக்கத்துடனும் இணைந்து கொண்டனர் என்பது இங்கே விளக்கப்படுகிறது. இயேசுவைப் பின்பற்றிச் சென்ற இப்பெண்கள் உத்தம சீஷத்துவத்தின் மாதிரிகளாக இருந்ததுடன், இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் தமது வருமானத்திலிருந்து அல்லது தமது வளங்களிலிருந்து ஆதரவளித்து உதவி செய்தனர். இயேசுவின் சீடர்களில் சிலர் மீன்பிடிப்போராயிருந்தனர். அவர்கள் இயேசுவைப் பின்பற்று முகமாகத் தமது தொழிலை விட்டுச் சென்றனர். இயேசுவின் நெருங்கிய வட்டத்திலிருந்து பணியாற்றியோரின் தேவைகளைச் சந்திக்கும் விதமாக அவரது பன்னிரு சீடர்களில் எவரேனும் கிரமமான வருமானத்தைக் கொண்டிருந்ததாக எவ்வித பதிவும் காணப்படவில்லை. ஆக, ஆண் சீடர்கள் பெற்றுக் கொண்ட அதே போதனையை ஆண்டவர் இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், பணிவிடை செய்ததன் மூலமும், தேவைகளைக் கண்டு கொள்ள உழைத்ததன் மூலமும் 'சீஷத்துவத்தின்' ஆரம்ப நிலைகளை செயல்வடிவில் இப் பெண்கள் காட்டி நிற்கின்றனர்.

தமிழ் மொழி பெயர்ப்புகளில் 'ஆஸ்திகளால் அவருக்கு உழியஞ் செய்த' அல்லது ஆதரவளித்து உதவிய (வசனம் 3 இன் பிற்பகுதி) என்ற பதத் தொடருக்கு, மூல பாஷையாகி கிரேக்க மொழியில் வழங்கப்பட்டுள்ள சொல்லானது, பணிவிடை செய்வதற்கு, காத்திருப்பதற்கு, டீக்கனாகப் பணியாற்றுவதற்கு – எனும் அர்த்தங்களைக் கொண்டுள்ளது. டீக்கன் என்னும்

பதத்திற்கு மூலபாஷையில் வழங்கப்பட்டிருக்கும் கருத்துக்களாவன – உதவியாளர், பணியாளர், அருட்பணியாளர் என்பன. நற்செய்தி நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் டீக்கன்மாரின் பணியானது முக்கியத்துவமானதாக இருந்திருக்கிறது என்பது தெளிவு. (அப் 6:1–6). லூக்கா 8:1–3 பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெண்கள், பெண்ளுக்குரிய பாரம்பரியமான விருந்தோம்பல் பணியை இயேசுவுக்கும் அவரது சீடருக்கும் ஆற்றினர். ஆனால் 'டீக்கன்' ஆக இருப்பதென்பது (நற் செய்தி நூல்கள் எழுதப்பட்ட காலத்தில்) கிறிஸ்தவ சமூகத்தில் ஆற்ற வேண்டிய ஒரு குறிப்பிட்ட பணியைக் குறித்ததாக இருந்தமை (அப் 6:1–6)யைக் கவனிக்க வேண்டும். ஆர்.ஜே.கரீஸ் என்னும் இறையியலாளர் இப் பகுதியைப் (லூக்கா 8:1–3) பற்றிக் குறிப்பிடும் பொழுது 'விருந்தோம்பலில்' அல்லாது தூதுவர்களாகவும், நற் செய்தியைப் பரப்பியவர்களாகவுமே இப் பெண்கள் லூக்கா நற் செய்தியில் காட்டப்படுவதாகக் கூறுகிறார். இப் பெண்கள் தமது வளங்களைப் பாவித்தே இயேசுவின் திருப்பணியில் இணைந்து சென்றனர் எனவும் இவர் குறிப்பிடுகிறார்.

பெண்கள் தமது பாரம்பரிய விருந்தோம்பல் எனும் தன்மைக்கும் மேலாக வெகுதூரம் செல்ல வேண்டியவர்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார் என்பது லூக்காவின் அனுமானமாக இருக்கவேண்டும் என நான் எண்ணுகிறேன். ஊழியத்தில் அவரோடு இருந்தார்கள் எனும் பதமானது (வச 1–3) லூக்கா நற்செய்தியாளன், சீஷத்துவத்துக்குக் கொடுக்கும் சொற்றொடராகக் காணப்படுகிறது. (உதாரணமாக 8:38,9:18, 22:5–6) யூத அதிகாரிகள் இயேசுவை மரணதண்டனைக் குட்படுத்திய வேளையில் ஏனைய பலர் பயத்தினாலும் பீதியினாலும் அவரைவிட்டுச் சென்ற வேளை ஈறாக தொடர்ச்சியாக இப் பெண்கள் இயேசுவுடன் இருந்தார்கள். அவரது பாடுகள், மரணம் ஆகியவற்றில் அவர் அருகில் இருந்ததுடன் அவருடைய உயிர்த்தெழுதலிலும் இவர்கள் சாட்சிகளாக இருந்தனர்.

லூக்கா 8:1–3 ஆனது, இயேசுவின் காலத்தில் பெண்களின் ஊழியம் பற்றிய ஒரு சக்திமிக்க ஆதாரமான விளக்கமாகக் காணப்படுகிறது. பன்னிருவருக்கும் சமமான ஒரு நிலையை அடைந்தவர்களாக இப் பெண்கள் இங்கே அடையாளங் காட்டப்பட்டப்பட்டிருக்கின்றார்கள். லூக்கா நற்செய்தி நூலில் கிறிஸ்துவின் சரிதத்தில் பெண்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகளைக் குறித்து ஒரு மேன்மையான கண்ணோட்டம் காணப்படுகிறது.

இவ்விடயங்களையும், இப்பகுதியின் விரிவான விளக்கத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டிய பணி இன்று திருச்சபைக்கு உள்ளது. குறிப்பாக சிறுபிள்ளைகள், வாலிபப் பிள்ளைகள் மத்தியில் இவ்வுண்மைகள் விளக்கப்பட்டு, வேதாகமத்தின் பாற்சமநிலையைக் குறித்த உண்மையான விளக்கப்படம் அவர்கள் உள்ளத்தில் பதிய உதவுதல் வேண்டும். எமது படிப்புகளும், அருளுரைகளும் இத் தோற்றத்தைப் பிரதிபலிப்பவையாக இருக்குமானால், எதிர்காலச் சந்ததியினர் வேதாகமத்தின் பாரபட்சமற்ற கருத்தைப் புரிந்து கொண்டவர்களாகவும் பாற்சமநிலையை மதிப்பவர்களாகவும் வாழ முடியும்.

## இகத்தினில் என் இதயதேவன்

*அன்பே என் இதயதேவா - என்*
*அன்பார்ந்த இயேசு நாதா*
*உம்மோடு நான் இணைய - என்*
*உள்ளம் துடிக்குதையோ!*

*இவ் உலகிற்கு நீர்*
*இறங்கி வர வேண்டும்*
*இம் மட்டும் என் வாழ்வில் நடந்ததை - உம்மிடம்*
*இயம்பி மன ஆறுதல் நான் பெற்றிட வேண்டும்.*

*அறிவுரைகள் பல - நீர்*
*உரைத்திட வேண்டும்*
*அதன்படி நான் நடந்திட - நீர்*
*அருள் ஈந்திட வேண்டும்.*

*என் சொந்தம் நீரேயென*
*எல்லாரிக்கும் கூறி மகிழ்ந்திட வேண்டும்*
*உம் விருப்பம் போல் - இவ்*
*உலகில் நான் நடந்திட வேண்டும்.*

*இவையாவும் நடந்திட வேண்டுமென - என்*
*இதயம் துடிக்குதையோ*
*இவையாவும் நிஜமானால் - இவ்*
*இகத்தினில் என்போல் பாக்கியசாலி யாருமுண்டோ?*

*- சோபனா சத்தியநாதன்*

## வாலிபர் சங்க சிறப்பு நிகழ்ச்சி ஒரு நாள் சுற்றுலா

*கடந்த மே மாதம் 25ம் திகதி எமது வாலிபர் சங்கத்தினர் ஓர் சுற்றுலாவினை மேற்கொண்டனர் இது றாகமவில் உள்ள ஆண்கள் இல்லத்தில் நடைபெற்றது. காலை 8 மணியளவில் ஆலயத்திலிருந்து புறப்பட்டு அவ் இடத்தை அடைந்தோம். அங்கு எமக்கு செய்திகளை வழங்க வண. ஈனொக் புனிதராஜா, அவர்களும் திரு. புவேந்திரன் அவர்களும் சமூகமளித்திருந்தனர்.*

*காலை துதிகளை நாம் ஏறெடுத்த பின்னர் எமக்கு வாலிபர்களது நிலை பற்றியும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் வண. ஈனொக் அவர்களும் வேதாகமத்தில் எவ்வாறு வாலிபர்கள் வாழ வேண்டும் என கூறப்பட்டுள்ளது என திரு. புவேந்திரன் அவர்களும் உரையாற்றினார்கள். மாலையில் விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டன. பின்னர் நாம் இச் சுற்றுலவை இனிதே நிறைவு செய்து ஆலயத்தை வந்தடைந்தோம்.*

*"தொடர்புத்துறை வாலிபர் சங்கம்"*

# A short Profile of Emeka Ojukwu

*C.D.Chinnakone*

Emeka Ojukwu was a Nigerian General in the army at the time of independence of Nigeria, which was a British colony. Nigeria like all other African countries was a melting pot of races and tribes following different cultures, traditions, religion and languages. Nigeria's dominant tribe was the Hausa who were followers of Islam. The Ibo tribe who occupied the western coastal region with the Port city of Harcourt in the Gulf on Guinea were an educated and industrious race following Christianity. The region they occupied was known as Biafra, which was the traditional homeland of the Ibo tribe. At the time of independence the British supported the claim of the Ibos for a separate state and there followed a civil war and the British let down the Ibo people who were massacred. The man who led the Ibo tribe was General Emeka Ojukwu who was a jewel in the crown of human race. This man who was like a demi-god to his people, was betrayed by one of his own people for money.

Fredrick forsythe the famous writer was a friend of Ojukwu and had written about the qualities of this man. "In life you come across a man in whose hands you can trust life, your wife and your fortune and be certain they will be beyond doubt safe, Do not lose sight of him for there are not many such men. Emeka Ojukwu is one such a man"

If he were just a good and loyal friend, he would be valuable but also unremarkable. Emeka goes much further than that. He has qualities that set him aside, not simply within a personal relationship, but among other men, and most of all among other Africans. He possesses a quality that many have sought and few achieved. It is called the capacity for leadership.

There are many, and I have met a few, who could administer, govern, even rule. But to lead, really to lead a whole people, takes something more; and it is not learned in schools or from books. It is not to be judged by fine clothes, big cars, and money in the bank or the shouting of slogans. It is not just the capacity to start a crowd cheering. A demagogue on a street corner can do that. Leadership takes more. It involves the possession of a series of qualities which make others prepared to follow the one who own them.

Some years ago I addressed my thoughts to what these qualities should be and came up with the following:- Strength without brutality, courage without recklessness, honesty without priggishness. Intelligence without pedantry, humour without frivolity and compassion without sentimentality. Then I looked at the list and realized there was something more, something missing. Call it the X factor. It may be presence, or charisma, the ability to dominate other men by sheer personality, or the capacity simply to inspire. Winston Churchill had it, Charles de Gaulle had it, John Kennedy had it, and David Ben Gurion, the father of Israel, had it. But I never knew an African who had it, till Emeka.

Inside Nigeria his enemies do not simply hate him; they fear him, even though he has uttered no threat against them. They fear his honesty against their own greed and corruption; they fear his courage against their own cowardice; they fear his intelligence against their own foolishness. But these are not the real reasons. The true reasons concern respect. They fear the respect that is still borne towards him despite an absence that would have destroyed a lesser man. In a Nigeria where for years the people have despaired of finding a man they could respect, despite vigorous censorship imposed, this man lives to inspire.

### சமாதானம்

உலகில் மனிதராகப் பிறந்த நாம் எல்லோரும் மற்றவர்களுடன் நல்ல முறையில் பழகி, ஜாதி, மதம் என்ற வேறுபாட்டை ஒழித்து வாழ வேண்டும். மனிதர்களாகிய நாங்கள் தான் ஜாதி, மதம், மொழி எனும் வட்டத்தை கீறி அவர் அந்த ஜாதி, இவர் அந்த மதம் என்று பிரித்து வைத்துள்ளோம். ஜாதி, மதம் என மனிதர்களை பல பிரிவுகளாக பிரித்து வைத்து நமது முன்னோர் தமது வரட்டு கௌரவத்தை விட்டுக் கொடுக்காது வாழ்ந்து வந்தனர். இன்றைய இளைய சமுதாயத்தினராகிய நாம் இதை மாற்றி அமைக்க வேண்டும். "யுத்தம் வேண்டாம், சமாதானம் வேண்டும்" என நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் தினமும் மன்றாடுவோம்.

– நிவேதா ஜெயசீலன்

# அறுவடைப் பண்டிகை

டில்ஸினி ஜெயக்குமாரன்

பாரம்பரியமாக எங்கள்திருச்சபைகளில் ஜுன், ஜுலை ஆகஸ்ட் மாதங்களில் வருடாந்த நன்றி படையல் அல்லது அறுவடைப் பண்டிகை அல்லது சேர்ப்பின் பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம். கடந்த வார உதய தாரகையிலும் இது பற்றிய ஒரு கண்ணோட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.ஆரம்ப காலத்தில் இருந்தே திருச்சபையானது, இந்த வருடாந்த நன்றி படையலை ஏறெடுத்து வருகிறது.இந்த பாரம்பரியம் இஸ்ரவேல் சமூகத்தில் இருந்து கிறிஸ்தவ சமூகத்துக்கு வழங்கப்பட்ட பாரம்பரியமாகும்.

இந்த பழக்கம் ஏற்பட்டத்தின் நோக்கம், அதன் இலக்கு என்பன இன்றைய நாட்களில் மறந்து விடப்பட்டன.இதைப் பற்றிய தெளிவான கண்ணோட்டம் பெற உபாகமம் : 26 ம் அதிகாரம் (இணைச்சட்டம் 26ம் அதி) 12-15ம் வரை உள்ள வாக்கியங்களை ஆராய்வது அவசியம்.

இந்தப் பாரம்பரியம் முழுக்க முழுக்க சமூக நலக் கண்ணோட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரவேல் மக்களின் முற்பிதாக்கள் காலத்தில் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்காக அலைந்து திரிகின்றவர்களாகவும், பின்னர் அடிமைகளாகவும் வாழ்ந்திருக்கிறார்கள்.

இக் காலங்களில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் ஏராளம். இந்தத் துன்பங்களில் இருந்தும், அடிமைத் தனத்தில் இருந்தும் கடவுள் அவர்களுக்கு விடுதலை கொடுத்து நிரந்தரமான இஸ்ரவேல் நாட்டிலே கொண்டு வந்து குடியேற்றினார். பாலும் தேனும் வழிந்தோடும் கானான் தேசம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

இதுவரை பட்ட துன்பங்கள்இனி இல்லையென்ற நிலையிலே அந்த மக்களுக்கு சமூகப் பொறுப்புணர்ச்சி அவர்கள் உள்ளத்தில் ஊற்றப்படுகின்றது. அதைத்தான் உபா; 26:12-15 வரை பார்க்கிறோம்.இப் பகுதியில், கண்டிப்பாக பத்திலொரு பாகம் - தங்கள் விளைச்சல், வருமானம் அனைத்திலும் - லேவியருக்கும், அன்னியர்க்கும், அனாதைகளுக்கும், விதவைகளுக்கும் கொடுக்கும்படி கட்டளை இடப்படுகிறது.

அது மட்டும் அல்லாமல் இந்த பத்தில் ஒரு பாகத்தில் இருந்து எந்தவிதமான, அவசரமான, அவசியமான சொந்தத் தேவைகளுக்காக எடுக்க மாட்டேன் என்ற உறுதிமொழியும் அல்லது எடுக்கக் கூடாது என்ற கட்டளையும் இஸ்ரவேலருக்கு வழங்கப்பட்டது.

சமுதாயத்தில் வளம் மிக்க, வலிமை-வசதி உள்ள ஒரு சாரார் இருக்கும் போது, அதே வேளையில் வசதி அற்ற, வாய்ப்புகள் வழங்கப்படாத ஏராளமான மக்களும் வாழ்கிறார்கள். இந்த வசதி அற்ற மக்கள் நலன் கருதியே இந்த நன்றிப்படையல் நிகழ்வு திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்று நடைமுறையில் இந்த அடிப்படை எண்ணம மறக்கப்பட்ட நிலையை நாங்கள் காண்கிறோம். எங்கள் சபைகளில் அனேகமானவை கிராமப்புற சபைகள். இச் சபைகளில் ஆண்டு தோறும் நன்றி செலுத்தும் விற்பனை விழா நடைபெறுகிறது. விற்பனை விழாவில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ப வருவாய்க்கேற்ப பொருட்களை கொண்டு வந்து ஒப்படைப்பார்கள். இந்தப் பொருட்கள் விற்கப்படும் பொழுது அனேகமாக கடன் அடிப்படையில் விற்பது வழக்கம். அதற்கான காரணம் தேவை உள்ளவர்கள் அதே நேரம் வருமானம் அற்றோர் தங்களுக்கு தேவையானவற்றை வாங்கி, வசதியான நேரத்தில் வசதியான வண்ணம் அவற்றைத் திருப்பிக் கொடுப்பதற்கேயாகும்.

ஆனால் இந்த நிலை தற்போது இல்லை. தற்போது வியாபார மயமாக்கப்பட்ட (Commercialised) நோக்கத்தையே திருச்சபையில் பார்க்கிறோம். வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு அதிலும் வருமானத்தை சபைகளின் சொந்த தேவைக்காக (Physical needs of the church) உபயோகிப்பதை காண்கிறோம்.

அதே வேளையில் பொருட்களை கொடுப்போர் மன நிலையும் மாற வேண்டும். உபா : 26 ல் குறிப்பிட்டபடி, குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறும் அளவிற்கு நாம் கொடுக்கிறோமா என்பதையும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

உபா: 26 இல் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பத்திலொரு பகுதியை எந்தவித சூழ்நிலையிலும் தனதுசொந்த தேவைக்க உபயோகிக்க கூடாது என்று. ஆனால் கொடுப்பவர் கடமைக்காகவும் ஏனோ தானோ என்ற மனப்பான்மையில் கொடுக்க முற்பட்டால் அது இறைவனின் கட்டளையை மீறும் செயல் ஆகும்.

திருச்சபைகளும், மக்கள் மனதிலே சமூகப் பொறுப்புணர்ச்சியை வலியுறுத்த வேண்டும். கடவுளிடம் இருந்து ஆசி பெற்றவர்கள், அந்த ஆசியை மற்றவருடன் கண்டிப்பாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

உபா: 26 ல் 14 ம் 15 ம் வாக்கியங்களில் இஸ்ரவேல் மக்கள் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி ஒன்று கூறப்படுகிறது.

அதில், "ஆண்டவரே நீர் கட்டளை இட்டது போல் எனது வருமானத்தில் 10ல் ஒரு பங்கை ஏழைக்கும், அனாதைகளுக்கும், விதவைகளுக்கும் கொடுக்கின்றேன், ஆகவே நீர்கூறியபடி எங்கள் நாட்டிற்கும், எங்களுக்கும் உம் ஆசிகளை வழங்கியருளும்."

கடவுள் கட்டளை இட்டபடி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் தகுதி எங்களுக்கு இருக்கிறதா? ஆண்டவர் கொடுத்த கட்டளைகளை நிறைவேற்றி இருக்கிறோமா? திருச்சபைகளும் சபையாரும் வருடாந்த நன்றிப்படையலை நடைமுறைப்படுத்தும்போது இதனைக் கருத்தில் கொள்வது அவசியம். கொடுக்கின்ற சபையாரிடம் , சமூக நலனுக்காகக் கொடுக்கின்றோம் என்ற உணர்வும், பெற்றுக் கொள்ளுகின்ற சபை, சமூக நலனுக்காகவே உபயோகிக்கின்றோம் என்ற உறுதிகொண்டிருப்பதும் அவசியம்.

# சபைப் பதிவேட்டிலிருந்து

## குழந்தை ஞானஸ்நானம்

† 28.07.2002 ஞாயிறு மாலை திரு / திருமதி செல்வகுமார் இராஜரட்ணத்தின் புதல்வன் ருக்ஷான் செல்வக்குமார் இராஜரட்ணம் ; புதல்வி ரூபினா செல்வகுமார் இராஜரட்ணம் ஆகியோருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுக் கிறிஸ்துவின் மந்தையிற் சேர்த்து கொள்ளப்பட்டனர்.

† செல்வி ஷாமலீன் மிலேனா விஜயரட்ணம் கடந்த 11.08.2002 அன்று மாலை வழிபாட்டில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுக் கிறிஸ்துவின் மந்தையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

## திடப்படுத்தல்

"இயேசுவைப் பற்றிக்கொண்ட நாள் சந்தோஷமான தினமே." ஏப்பிரல் மாதம் 21ம் திகதி காலை 7.30 மணிக்கு ஞாயிறு ஆராதனையில் எமது பேராயர் பேரருட் திரு.கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்களால் 19 வாலிபப் பிள்ளைகள் திடப்படுத்தல் பெற்று சபையின் முழு உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

பெயர் விபரம் பின்வருமாறு:-

Mas. Adams Diroshan Jeyaseelan
Mas. Sujanthan Rasakanthan
Mas. Chrishanth Sutharman Ajithkumar
Mas. Samuel Dinesh Srishkantharajah
Mas. Selvarajah Winston Sinthujan Edward
Mas. James Dilan Edward
Mas. Dinesh Jerushan Anton Jebanesan
Mas. Gnanaseelan Jeganathan
Mas. Andrew Vaheesan Sornalingam
Mas. Matthew Ajanthan Ravimaran
Mas. Iruthayam Christopher
Mr. Johnson Ratnavel
Miss. Shara Arulanantham
Miss. Oenone Savitha Mills
Miss. Anna Sabatini Ratnarajah
Miss. Hisholiney Nandakumar
Miss. Loginee Logeswaran
Miss. Roshaney Rex Mahendran
Miss. Stella Sithamparam

## திருமணம்:

1. வடக்கு ஏழாலை திருச்சபையைச் சேர்ந்த திரு. எஸ். இராஜரட்ணம், காலம் சென்ற திருமதி ஹரியற் இராஜரட்ணம் அவர்களின் புதல்வன் ஹென்றி அரியராஜா இராஜரட்ணம் அவர்களுக்கும், பளையைச் சேர்ந்த திரு. திருமதி பி. பாலேந்திரன் அவர்களின் புதல்வி டெய்ஸி கிருஷாந்தி பாலேந்திரன் அவர்களுக்கும் பரிசுத்த விவாகம் 20.04.2002 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வெகு சிறப்பாக எமது சபையில் நடைபெற்றது.

2. எமது சபையைச் சேர்ந்த Dr & Mrs ஹென்றி இராஜரட்ணம் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் டொக்டர் சாமுவேல் சுஸ்ருத்த இராஜரட்ணத்துக்கும், Dr & Mrs விக்டர் விவ்வின் அவர்களின் சிரேஷ்ட புத்திரி கேதர் ஜேனுக்கும் பரிசுத்த விவாகம் 20.04.2002 அன்று லண்டனில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

3. உடுவில் திருச்சபையைச் சேர்ந்தவர்களும், தற்பொழுது எமது திருச்சபையைச் சேர்ந்த திரு. திருமதி எஸ். இராஜரட்ணம் அவர்களின் புதல்வன் கியூபேட் ஜெபசேயன் அவர்களுக்கும், யாழ் அங்கிலக்கன் திருச்சபையைச் சேர்ந்த திரு.திருமதி எஸ். குமாரசாமி அவர்களின் புதல்வி ஐறின் ஷிரோமி குமாரசாமிக்கும் பரிசுத்த விவாகம் 11.05.2002 அன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு எமது சபையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

4. அச்சுவேலி திருச்சபையைச் சேர்ந்த காலஞ்சென்ற விடபிள்யு. சிதம்பரப்பிள்ளை, திருமதி சிதம்பரப்பிள்ளை அவர்களின் புதல்வி டொக்டர் கௌசலா சிதம்பரப்பிள்ளைக்கும், மட்டக்களப்பு சபையைச் சேர்ந்த திரு.திருமதி மாஷலின் அவர்களின் புதல்வன் டொக்டர் எம். அசோக்குமார் மார்ஷலின் அவர்களுக்கும் பரிசுத்த விவாகம் 22.06.2002 அன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு எமது சபையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

5. வத்தளையைச் சேர்ந்த திரு.திருமதி. எஸ். நாராயணன் அவர்களின் புதல்வன் செல்வராஜ் நாராயணன் அவர்களுக்கும், மாங்குளம் திருச்சபையைச் சேர்ந்த திரு.திருமதி எஸ். தியாகராஜா அவர்களின் புதல்வி வணக்கத்துக்குரிய செல்வி தயாளினி தியாகராஜாவிற்கும் பரிசுத்த விவாகம் 13.07.2002 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு எமது சபையில் சிறப்பாக நடைபெற்றது.

## துயர் பகிர்வோம் :

1. அளவெட்டி திருச்சபையைச் சேர்ந்தவரும், தற்பொழுது எமது திருச்சபையைச் சேர்ந்தவருமான 95 வயது நிரம்பிய பண்டா என அழைக்கப்படும் போல் தேவசகாயம் 20.04.2002 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். இவரது நல்லடக்க ஆராதனை 21.02.2002 ஞாயிறு காலை 10.30 மணிக்க 53 / 5, ஸ்ரீ குணரட்ண மாவத்தை, கல்கிசையில் நடைபெற்றது.

2. வடக்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது மூர் வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது சபையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை செல்வி கிறேஸ் தங்கம்மா வைரவி 03.05.2002 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். அவரது நல்லடக்க ஆராதனை 04.05.2002 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்சாலையில் நடைபெற்றது.

3. ஏழாலை வடக்குத்திருச்சபையைச் சேர்ந்தவரும் தற்பொழுது கொழும்பு திருச்சபை அங்கத்தவருமாக இருந்து லண்டனில் சிறிது காலம் வசித்தவருமாகிய இளைப்பாறிய ஆசிரியர் தம்பிமுத்து செல்வரட்ணம் 12.07.2002 அன்று லண்டனில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவரது நல்லடக்க ஆராதனை 17.07.2002 லண்டனில் நடைபெற்றது.

4. ஏழாலை தெற்குச் சபையைத் தாய்சபையாகக் கொண்டவரும் கிளிநொச்சித் திருச்சபையின் முன்னாள் பொருளாளரும், எமது திருச்சபையைச் சேர்ந்தவரும் அனைவராலும் 'மம்மி' என அன்புடன் அழைக்கப் பட்டவருமாகிய திருமதி றோஸ் ஜெயமணி யோகலிங்கம் கடந்த 02.08.2002 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார். அன்னாரது நல்லடக்க ஆராதனை 06.08.2002 அன்று ஏ.எவ். றேமன்ஸ் அந்திமசேவைக் கூடத்தில் நடைபெற்றது.

### விசேஷ விருந்தினர் வருகை:

1. தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த வண. சாம் பிரபாகரன், வண செபஸ்டியன், வண. கலாநிதி. சக்தி கிளார்க் ஆகியோர் 28.04.2002 ஞாயிறு காலை ஆராதனையில் கலந்து கொண்டு சபையினருக்கு தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

2. சென்னை திருமண்டலத்தில் 15 வருஷம் பேராயராகக் கடமையாற்றி தற்பொழுது ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கும் பேராயர் அதி.வண. சுந்தர் கிளார்க் 26.05.2002 அன்று ஞாயிறு காலை ஆராதனையில் திரித்துவம் குறித்து அருளுரையாற்றினார். அவரது மகன் சக்தி கிளார்க்கும், குடும்பத்தினரும் ஆராதனையில் பங்கு பற்றி அன்பைப் பகிர்ந்து கொண்டார்கள்.

3. தமிழ்நாடு இறையியல் கல்லூரி பேராசிரியர் வண. (திருமதி) மாக்கிறெட் கலைச்செல்வி லாபீர், அவரது மகள் மஞ்சுளா லாபீர் சகிதம் எம் மத்தியில் வருகை தந்து 29.05.2002 அன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு எமது சபை அடியார்களுடன் பெண்கள் இறையியல் பற்றி கலந்துரையாடினார். 02.06.2002 அன்று காலை ஆராதனையில் கடவுளுடைய செய்தியை எமக்களித்தார். அதனைத்தொடர்ந்து வாலிபர்களின் விருப்பத்திற் கிணங்க அவர்களது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். பின்னர் அன்றைய தினமே இந்தியாவிற்கு தனது பிரயாணத்தை மேற்கொண்டார்.

4. தமிழ்நாடு இறையியல் கல்லூரி முன்னாள் பேராசிரியரும், பின்னர் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசியும், தற்போது தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் முதல்வராகவும் பணிபுரியும் அருள் திரு. கலாநிதி டயான்சன் கார் அவர்கள் எம் மத்தியில் வருகை தந்து, 23.06.2002 அன்று காலை ஆராதனையில் கலந்து கொண்டு எமக்கு இறை செய்தியை வழங்கினார்.

5. சுவிற்சர்லாந்து சீர்திருத்த சபையிலிருந்து வருகை தந்த திரு. ரவி சுப்பிரமணியம், அவரது பாரியார் திருமதி பிறிகேட் மோகன்தலார் சுப்பிரமணியம், பிள்ளைகள் இருவர் உட்பட இக்குடும்பம் 07.07.2002 ஞாயிறு காலை ஆராதனையில் கலந்து கொண்டு திருமதி சுப்பிரமணியம் ஆசியுரை வழங்கினார்.

### குரு அபிஷேகம்

05.05.2002 அன்று ஞாயிறு காலை 7.30 மணிக்கு எமது சபையில் குரு அபிஷேக ஆராதனையும், பரிசுத்த நற்கருணை ஆராதனையும் சங்கீத ஆராதனையாக மகாகனம் கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்களால் நடாத்தப்பட்டது. வண. சுப்பிரமணியம் டேவிட் குகனேஸ்வரன் (நுவரேலியா உதவி ஊழியன்) குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். அன்றைய ஆராதனைக்குரிய அருளுரை வண. கலாநிதி டி.எஸ். தியாகராஜா அவர்களால் வழங்கப்பட்டது.

### இவ்வாண்டு தொடர்ந்து பணி செய்யும் உதவி ஊழியை 2002 மே தொடக்கம் 2003 மே வரை

வண. (செல்வி) டெய்சி ஆசீர்வாதம் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் மருதனார் மடம் இறையியல் கல்லூரியில் B.Th பட்டம் பெற்றவர். இவர் 2001ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ம் திகதி கொழும்பை வந்தடைந்து 14ம் திகதி உதவி ஊழியப் பொறுப்பை ஏற்று பணிபுரிந்தார். திரும்பவும் 2002 ம் ஆண்டு மே மாதம் தொடக்கம் எம் மத்தியில் பணிபுரிய கிருபை கிடைத்தமையிட்டு சபையின் சார்பில் மகிழ்ச்சியடைகிறேன்.

### பிள்ளைகள் ஆராதனை

கடந்த 30/06/2002 காலை வழிபாடு, பிள்ளைகள் ஆராதனையாக நடத்தப்பட்டது. சமயக்கல்விக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட வழிபாட்டு ஒழுங்கு பின்பற்றப்பட்டது. பிள்ளைகள் சிறப்புப்பாடல்களைப் பாடினர். இவ்வழிபாட்டில் "கடவுளுடைய ராஜ்ஜியம்" எனும் சிந்தனைப் பொருளில் திருமதி.தயா.தியாகராஜா அவர்கள் அருளுரையாற்றினார்.

(சபைபோதகர்)

# The prevailing economic crisis, and the actions of the present Government to solve / remedy

It is a known fact that the present chaotic economic crisis has been consequent to and or following a seven-year rule of total in competency, corruption wastage and most of all the conduct of a suicidal war for peace. The Treasury is bankrupt; recently the publice were exposed to a pathetic call Dy. Finance Miniter and advisor to the P.M. ex. Secy to the Treasury Mr. Paskaralingam Calling for public financial assistance to redeem the Government. It would appear that such a desperate appeal exposed unfortunately a lack of a strategic plan, by the Government in retrieving and revamping the economy.

The Sri Lankan public are unlike the people of Thailand who rose up as one to the task of helping their nation in a moment of crisis. If a dispassionate assessment of the depth of the economic crisis is made it clearly indicates that the economy is virtually stagnant, the cost of living is rising at a rapid rate and the euphoria of the peace process that started with a bang appears to be coming to a silent slowing down with no positive movement visible. The development strategy that should be clearly visible to ensure revamping of the economy and which is so vital, appears to be a non-starter except on a propaganda blitz. The public can easily identify the hollow and shallow attempt in the 100 day "achievement". This is a dangerous illusion that is indicative of a malady of all our politicians. The mood of the masses is slowly but surely eroding the confidence and expectations of the people.

**C.D. Chinnakone**

The tragedy is that the problem is although large but it is not an insurmountable problem. What is deplorable is the lack of determination and the absence of a concerted practical action plan. On the contrary it is the same scenario of publicity, cover-up, and the type of camouflage that prevailed over the past seven years. This is a perennial national weakness that has to be overcome with a resolute will if we are to avoid our economic crisis.

During an outbreak of civil srtife or any natural calamity that is the time you need and effective leader who can rise up to the occasion to salvage the country. It is a moment of national historic opportunity for a true leader to gather his team and launch out with a plan of action to lead and monitor performance in pursuit of dedicated targets. Such a course will win the confidence of the people who will respond to support. We have witnessed a number of high powered committees appointed to plan, we have seen planning ministries headed by Ministers who overnight assume that they are fountains of knowledge and wisdom when in reality they are the epitome of ignorance. Even the planes never see the dawn of implementation. What we urgently need is practical solutions that should be implemented. Any action plan should set out targets to be phased out for implementation and such a course should be regularly monitored for performance and results.

When you involve in such a methodology you are interacting or communicative or having a close dialogue with all levels of staff and people who are working as a team and the spirit of participation and job satisfaction creates a psychological motivation. Such a course showing signs of progress will reflect with the people who witness a change in the attitude of leadership that is taking and working on a plan of action that is being implemented. If such a course of early action is not initiated we will have only ourselves to blame because time is running out.

# செருப்பு பேசுகிறது

*(செருப்பு – Bata கேட்ட கேள்விகளுக்கு தந்த பதில்)*

**உங்களைப் பற்றி ஏதேனும்...**

*மனிதப் பிறப்புகள் நலமுடன் வாழ*
*மணமுவந்து தாலிகட்டிய மனைவிகள் நாங்கள்*
*பாதத்தை பாதுகாக்கும் பெட்டகங்கள்*
*எஜமான் வீட்டின் உள்ளே*
*இருக்கின்றாரா? இல்லையா? என்பதை*
*வாசலின் வெளியே அறிவிக்கும்*
*அறிவுப்பு பலகைகள்நாங்கள்*
*காலுக்கு கட்டுப்பட்டதால்*
*காலமெல்லாம் காலடியில் மிதி வாங்குகிறோம்*
*மனிதனை சிறிது காலம் இன்ப மூட்டும்*
*மத்தாப்புக் குச்சிகள்*
*காடு - மேடு பள்ளம் போனாலும்*
*மனிதன் பாதத்தினை*
*காலமெல்லாம் காக்கும்*
*களங்க மற்ற தாய்குலம் நாங்கள்*
*கால் பாதத்தால் மிதித்து எங்கள்*
*அழகை குறைப்பதால் - எங்களை*
*வெறுப்பதை நினைத்து*
*கண்ணீர் விடுகின்றோம்...*

**மிதிபட்டு கண்ணீர் வடிக்கும் உங்களை சில நேரங்களில் கைகளில் தூக்கி சுமக்கிறார்கள் இல்லையா? அது பற்றி....**

*சில நேரங்களில்*
*நீர் - சகதி போன்ற*
*இடங்களில் எங்களை அவர்கள்*
*இஷ்டப்படி தூக்கிச் செல்வது*
*நாங்கள்*
*அவர்களைவிட்டுப் பிரிந்து விடுவோம்*
*என்ற*
*ஒரு ஏக்கந்தான்!*

**சிறப்பான உழைப்புக்கு உங்களைத்தானே சொல்லுகிறார்கள்? அது பற்றி...**

*உழைப்பு பற்றிக் கூறுவதால்*
*எங்கள் பயணங்கள் குறையவில்லையே*
*அத்தோடு எங்கள் மதிப்பும் கூடவில்லை*
*தீவினை காரனை இழிவுபடுத்த*
*என் பெயரைச் சொல்லி அடிப்பேன்*
*எனக் கூறி என் மதிப்பை*
*குறைத்து விடுகிறார்களே!*
*ரொம்ப மோசமான மனிதர்களய்யா!*

**சரி**
**குறைகளைப் பற்றி ..........**

*திடீரென ஆலயத்தின் முன்பு*
*திருமண வீட்டு வாசல்களில்*
*பெரும் மண்டபங்களில்*
*கூட்டம் கூடுவதுண்டு*
*எங்களுக்குள்ளும் உயர்ந்தவன் - தாழ்ந்தவன்*
*என்ற பாகுபாடு உண்டு*
*எல்லோரும் ஒத்துழைத்து*
*கடைசிவரை தீர்மானம் போட*
*இருப்பதில்லை*
*பொதுவாய் எங்களில் பகட்டானவர்கள்*
*எவராவது புதியவர்களைக் கண்டால்*
*தங்கள் அழகால் அவர்களைக் வர்ந்து*
*அவர் பின்னே சென்று விடுவார்கள்.*

**இந்தத் துன்பப் பிடியிலிருந்து தப்ப முயன்றதுண்டா?**

*உண்டு - சில நேரங்களில்*
*வெள்ள நீரில் எங்களை மூச்சு திணற*
*முக்கி வைக்கும் போது*
*முக்கியமாக காலைவிட்டு*
*முழுவதாய் ஓடி மறைவதுண்டு*

*சில நேரங்களில்*
*எங்கள் அடிமை வாழ்வை நினைத்து*
*கொடுமையால்*
*கொடுமையான தற்கொலை செய்ய*
*முயற்சி எடுத்து*
*முழுவதுமாய் சக்தியால் மாண்டு அழிவதுண்டு.*

**வாங்கிய புதுசில் காலைக்கடிக்கும் வழக்கம் எதற்காக?**

*சீ! சொல்ல வெட்கமாயிருக்கு*
*எங்களை மணந்தவர்கள் மேல்*
*ஓர் தணியாத பற்றினால்*
*கடித்துப் பார்ப்போம்*
*ரொம்பக் கடித்தால் - நாங்களே*
*மருந்தாவோம்.*

*ஒரு முறை கடித்தால்*
*பின்பு கடிக்கவே மாட்டோம்!*

**திடீரென நீங்கள் அறுந்து போய் மானிடரை திண்டாட வைப்பது ஏன்?**

*திடீரென மானிடர்கள்*
*நாங்கள் இருப்பதை மறந்து விட்டு*
*படு மகிழ்ச்சியாக அலைவர்*
*எங்கள்திறமையை - தியாகத்தை*
*நினைப்பதற்காக*
*அறுந்து விடுவோம்*
*ஊர்த் தெருவின்*
*ஓரமாக ஒதுங்கிய*
*மனிதர் வாழ்வை*
*நினைத்து*
*நாங்கள் அறுந்து விடுவோம்.*

நன்றி

# எமது ஆத்மீக வளர்ச்சிக்குத் தேவனின் திட்டங்களும் வாக்குத்தத்தங்களும்

R.Rajasingam

பெற்றார் பிள்ளைகளைப் பற்றிப் பேசும் போது, அவர்களின் வளர்ச்சியைப் பற்றியே பேச விரும்புகிறார்கள். பிள்ளைகளின் வளர்ச்சியைப் பற்றி பேசுவது இயற்கை. எங்கள் குடும்பம் வளருவதைப் பார்க்க எமக்குச் சந்தோஷம். வளர்ச்சி எங்கள் கடவுளுக்கும் முக்கியம். ஆனால் அவர் சரீர வளர்ச்சியிலும் பார்க்க ஆத்மீக வளர்ச்சியிலேயே கரிசனை கொண்டவராய் இருக்கிறார். எங்கள் ஆத்மீக வளர்ச்சியைப் பற்றித் தேவனின் திட்டம் என்ன? சுருக்கமாக இங்கே விடை இருக்கிறது. விசுவாசிகளின் ஆத்மீக வளர்ச்சிக்குத் தேவையானவற்றைக் கொடுக்கவும், அதனால் இயேசு கிறிஸ்துவைப் போல வரச் செய்யவும்தான் தேவனின் திட்டம் அமைகிறது. தேவன் எங்களை இரட்சிக்க மாத்திரம் திட்டம் செய்ய வில்லை. எங்களை வளரச் செய்யவும் அவர் திட்டம் செய்தார். இவ்விஷயத்தில் எங்கள் மனதில் வரும் கடுமையான வினாக்கள் பின்வருமாறு:-

1. ஆத்மீக வளர்ச்சி ஏன் அவசியம்?
2. எந்தெந்த விஷயங்களில் நாங்கள் ஆத்மீக வள்ர்ச்சி அடைய வேண்டும்?
3. எப்படி நாங்கள் ஆத்மீக வளர்ச்சி அடையலாம்?
4. எங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கத் தேவனின் திட்டத்திலே என்ன வாக்குத்தந்தங்கள் தொடரும்?

1. ஏன் ஆத்மீக வளர்ச்சி அவசியம்?

நாங்கள் இரட்சிக்கப்படும் போது, நரகத்தின் தண்டனையிலிருந்து தப்பி, நித்திய ஜீவனின் வாக்குத் தத்தத்தைப் பெற்றோம். இரட்சிப்பு மிகவும் பெரிய காரியம். நாங்கள் மறுபடி பிறந்த பின் வளர வேண்டிய அவசியம் என்ன? இது ஒரு நியாயமான வினா. நாங்கள் கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன் பெற்ற பின் ஏன் நாங்கள் ஆத்மீகத்தில் வளர வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக எங்களிடத்தில் ஆற்றல் இருப்பதால் நாங்கள் ஆத்மீகத்தில் வளர வேண்டும். தேவன் எங்களை இயேசு கிறிஸ்துவின் சாயலில் புது சிருஷ்டிகளாய் வளர்ச்சியும் ஆத்மிக முன்னேற்றமும் உடையவர்களாய்ப் படைத்தார். எங்கள் கிறிஸ்தவ சீவியத்தில் நாம் வளர்ச்சி அடைய அதிக இடம் உண்டு. பேதுரு அப்போஸ்தலர் தனது இரண்டாவது நிருபத்தில் அதி 3:18 இல் சொல்லுகிறார். "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்." இது நல்ல புத்திமதி மாத்திரமல்ல, நாம் தேவனின் குழந்தைகளாய் எப்பொழுதும் இருக்கமுடியாது. எங்கள் ஆத்மீக வளர்ச்சிக்குத்தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். ஏனெனில் நாங்கள் நித்தியம் ஆத்மிக குழந்தைகளாய் இருப்பதை அவர் விரும்பவில்லை. தேவனின் திட்டம் எங்கள் ஆத்மீக பிறப்பை அடுத்து, ஆத்மீக முதிர்ச்சி அடையச் செய்வதே. தேவ வார்த்தையாகிய பாலை விட்டு விட்டு வார்த்தையாகிய மாம்சத்தை உண்பதே (1 பேதுரு 2:2, எபி 5:14)

மூன்றாவதாக, நாங்கள் ஆத்மீகத்தில் வளர வேண்டும். ஏனெனில் வளர்ச்சி முதிர்ச்சியை அடையும். ஆனால் வளர்ச்சிக் குறைவு உலக சம்பந்தமான காரியங்களில் மனதை அதிகம் செலுத்தத்தூண்டும். பவுல் கொரிந்து சபையாரைக் கடிந்தார். ஏனெனில் அவர்கள் கொஞ்சக் காலத்துக்கு முன் கிறிஸ்துவை நம்பினார்கள். ஆனால் அவர்கள் முதிர்ச்சியடையவில்லை. நாங்கள் மறுபடி பிறந்தால் கிறிஸ்தவ பிரயாணத்தின் நீண்ட யாத்திரையைத் தொடங்குவோம். புதிய பிறப்பு என்பதன் கருத்து நாங்கள் அடைந்து விட்டோம் என்று அல்ல நாங்கள் தொடங்கிவிட்டோம் என்பதே. ஆத்மீக வளர்ச்சி என்பது இயேசு கிறிஸ்துவைப் போல் வருவதற்கு நாம் செல்லும் பாதையாகும்.

(2) எந்தப் பகுதிகளில் நாம் ஆத்மீகமாய் வளர வேண்டும்

தேவன் எங்களுக்கு ஆத்மீக வளர்ச்சிக்கு என்ன ஒழுங்குகள் செய்திருக்கிறார். நாங்கள் எல்லோரும் விசுவாசிகளாய் எப்படி வளர வேண்டுமென்பதற்கு சில வழிவகைகள் கூறப்படுகின்றன.

எங்கள் கிறிஸ்தவ குணத்தை வளர்க்கக் கூடிய காரியங்களில் நாம் வளர வேண்டும். ஆவியின் கனியால் எங்கள் சீவியம் நடத்தப்பட வேண்டும். அவையாவன:

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். (கலாத்தியர் 5:22-23)

குணத்தில் மாத்திரமல்ல, ஆத்மீக அறிவிலும் நாம் வளர வேண்டும். அப்போஸ்தலன் பவுல் கொலேசிய விசுவாசிகளுக்குச் செபித்தார். "சகலவித நற் கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக, அவருக்கு பாத்திரராய் நடந்து கொள்ளவும்...." (கொலோசேயர் 1:10) நாங்கள் மறுபடி பிறக்கும் போது, தேவனின் குணத்தின் அறிவு, அவரின் வேலைகள், அவரின் இயல்பு, அவரின் விருப்பு பொறுப்புக்கள் எல்லாம் குறைவாகத்தான் இருக்கும். ஆனால் அவரைப் போல் இருந்தால் அவரைப் பற்றிய அறிவைக் கூட்ட வேண்டும். அது தான் தேவனின் ஆத்மீக வளர்ச்சியின் திட்டம்.

நாங்கள் வேதாகமத்தை வாசித்து எங்கள் அற்புத கர்த்தாவைப் பற்றி எங்களால் கூடிய மட்டும் அறிய வேண்டும். அத்தோடு கூட தேவனின் சித்தத்தைப் பற்றிய அறிவிலும் வளர்ச்சியடைய வேண்டும். இது கஷ்டமாகத் தோன்றினாலும் நாங்கள் தேவனுடைய வார்த்தையை வாசிக்க விரும்பினால் அது அப்படியிராது . நாங்கள் தேவனின் வசனத்தை வாசித்து, நம்பினால் அவரின் சித்தத்தை விளக்குவதில் வளர்ச்சியடைவோம்.

(3) எப்படி நாங்கள் ஆத்மீக வளர்ச்சி அடைவோம்

ஆத்மீக வளர்ச்சி எப்படி வரக்கூடும்? எங்கள் சரீர வளர்ச்சிக்கு ஆரோக்கியமான உணவும் ஒழுங்கான தேகாப்பியாசமும் தேவை. எங்கள் ஆரோக்கிய உணவாகிய ஆத்மீக உணவு வேதாகமத்தில் இருக்கிறது. தேவனைப் பற்றி அறிகிற அறிவும் கிருபையில் வளரவும் தேவனின் வசனம் மிகக் குறைவாக நாளாந்தம் தேவைப்படுகிறது. (தீமோத்தேயு 3:16–17) இயேசு சொன்னார் "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" (யோவான் 6:63) இதனால் மாம்சம் அல்ல பரிசுத்த ஆவியே எங்களுக்கு ஆத்மீக சீவியத்தைத் தருகிறது. ஆகையால் நாம் ஆவியினாலேயே ஆத்மிக வளர்ச்சியடைகிறோம். ஆனால் சமமாக ஆத்மீக வளர்ச்சிக்கு நல்ல பயிற்சியும் ஒழுங்கும் தேவை. இது தேவனுக்கும் அவரின் வசனத்துக்கும் கீழ்ப்படிந்தாலும் வரும். 1 யோவான் 2:5 கூறுகிறது: "அவருடைய வசனத்தை கைக் கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்" சரீர முயற்சி கொஞ்சம் உதவி செய்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் நாங்கள் தெய்வ பக்தியை அனுசரிக்க வேண்டுமென்று கவனித்திருக்கிறார். "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோசனமுள்ளது." (1 தீமோத்தேயு 4:8)

(4) எங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு தேவனுடைய திட்டத்துடன் என்னென்ன வாக்குத்தத்தங்கள் தொடர்ந்து செல்லும்?

தேவனுடைய திட்டம் எப்பொழுதும் அவைகளை நிறைவேற்றும். வாக்குத்தத்தங்களுடன் தொடர்ந்து செல்லும். தேவனின் திட்டம் ஒவ்வொரு விசுவாசியும் ஆத்மீகத்தில் வளர வேண்டும் என்பதே.வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களை இங்கு குறிப்பிட்டால் உங்கள் ஆத்மீக முதிர்ச்சியை தீவிரமாக்கும்.

யோவான் 14:16–17

"நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூடஇருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவரை அறிவீர்கள்."

எபேசியர் 4:14–15

"நாம் இனி குழந்தைகளாய் இராமல் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள... அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும் படிக்கு அப்படி செய்தார்."

எபிரேயர் 13:20–21

"நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எறிவரப் பண்ணின சமாதானத்தின் தேவன் ...... நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்ப்பொருந்தின வர்களாக்குவராக இயேசுவின் மூலம்."

2 பேதுரு 1:5 –8

"உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது."

இவைகள் வல்லமையுள்ள வாக்குத்தத்தங்கள். தேவன் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்று அறிந்த பின்தான் அதை எண்ணங்கொண்டார். தேவன் எங்கள் ஆத்மீக வளர்ச்சியை விரும்புகிறார். மேற் கூறியவைகள் தான் அவருடைய திட்டமும் வாக்குத்தத்தங்களும்.

## I AM TOO BLESSED TO BE STRESSED AND TOO ANOINTED TO BE DISAPPOINTED.

*I refuse to be discouraged to be sad or to cry*
*I refuse to be down hearted and here's the reason why:*

*I have a God who is almighty ; who is sovereign and supreme ;*
*I have a God who loves me ; and I am on his team*
*He is all wise and powerful ; Jesus is his name*
*Though everything else I refused to defeated*
*My eyes are on my God.*
*He has promised to be with me, as through this life I trod.*
*I am looking past my circumstances, to heavens throne above.*

*My prayers have reached the heart of God.*
*I am resting in his love*
*I give thanks to him in everything.*
*My eyes are on his face*
*The battle is his ; the victory is mine*
*He will help me with the race*
*I repeat "I am too blessed to be stressed"*
*You have just taken a dose of encouragement*
***By :. Nirupa.***

# செய்திச் ச(ா)ரம்

## விடுமுறைத்தின வேதப்படிப்புகள்:

கடந்த ஏப்ரில் 27 ஆம் திகதி சனிக்கிழமையன்று ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூலைக்குறித்த ஒரு விரிவான வேதப்படிப்பு நடைபெற்றது. அருட்திரு ஈனோக் பூ. புனிதராஜா இப்படிப்பை நடத்தினார்.

கடந்த ஜூன் மதம் 23 ஆம் திகதியன்று புறக்கோட்டை சிற்றி மிஷன் சபைப் போதகரான அருட்திரு ஜே. விவேகநாதன் அவர்கள் 'எபேசியர்' நிருபத்தில் ஒரு விரிவான வேதப் படிப்பை நடத்தினார். இவ் வேதப்படிப்பில் நமது பேராயர் அவர்களும் அருட்கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜா அவர்களும் கலந்து கொண்டு, கேள்வி நேரத்தில் அருட்திரு விவேகநாதன் அவர்களுடன் பதில்களை வழங்குவதில் இணைந்து கொண்டனர்.

## ஆங்கில வழிபாடுகள்:

இவ் வருடத்தில் எமது திருச்சபை மக்களின் புதிய முயற்சியாக மீண்டும் மாதமொருமுறை ஆங்கில வழிபாடுகளை – மாலை வழிபாட்டில் ஏறெடுக்க தீர்மானித்தோம். கடந்த ஏப்ரில் 28 ஆம் திகதியும் ஜூன் 23 ஆம் திகதியும் இவ் வழிபாடுகளை நடத்த முடிந்தது. எமது பாடகர் குழுவினரின் ஆங்கிலப் பாடல்களைப் பாடும் திறமையைக் கண்டு கடவுளுக்குள் மகிழ்ச்சியடையக் கூடியவர்களாயிருக்கிறோம். முதலாவது வழிபாட்டில் மிலாகிரிய பரி பவுல் ஆலயச் சபைக்குரு அருட்திரு. கிறிஷாந்த மெண்டிஸ் அவர்களும், இரண்டாவது வழிபாட்டில் மருதானை லொக்கேட் பரி. இம்மானுவேல் ஆலய சபைக்குருவான அருட்திரு. பிரின்ஸ் தேவானந்தன் அவர்களும் கடவுளுடைய செய்தியை வழங்கினர்.

## கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) கிறிஸ்தவ பாடக் கருத்தரங்கு

இக் கருத்தரங்குத் தொடரை இவ் வருடம் ஏப்ரில் மாதத்திலேயே ஆரம்பிக்க முடிந்தது. ஏப்ரில் 13 ஆம் திகதி அருட்திரு ஜே. விவேகநாதனும், 26 ஆம் திகதி அருட்திரு கே.ஜே. அருள்ராஜ் அவர்களும் இக் கருத்தரங்குகளை நடாத்தினர்.

## மாதாந்த இலவச வைத்திய சிகிச்சை முகாம்

எமது திருச்சபையின் முதுவாலிபர் சங்கத்தினரின் முயற்சியினால் கடந்த இரு வருடங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து நடத்தப்படும் இச் சிகிச்சை முகாம் தொடர்ந்தும் பல வறிய, வசதி குறைந்த மக்களின் வைத்தியத் தேவைகளை நிறைவேற்றி வருகிறது. வைத்திய கலாநிதிகளான திருமதி ஜே.சி. கனகராசா, ஏ.சி. தேவப்பிரியா, திருமதி தாரிணி தேவப்பிரியா ஆகியோரும் மருத்துவ உதவியாளராக திருமதி D. ஜேம்ஸ் அவர்களும் இப் பணியை முன்னெடுக்கத் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். மாதந்தோறும் முதலாவது வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்று வரும் இச் சிகிச்சை முகாமில் சபை மக்கள் தமது பகுதியிலிருக்கும் வசதி குறைந்த மருத்துவத் தேவை இருப்போரை அனுப்பி வைக்கலாம்.

## வருடாந்த நன்றிப் படையில் வழிபாடும் விற்பனை விழாவும்

கடந்த 28.07.2002 அன்று காலை வழிபாடு எமது திருச்சபையின் வருடாந்த நன்றிப் படையல் வழிபாடாக அமைந்தது. சபை மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். அன்றைய வழிபாட்டில் சிறப்பு ஆராதனை ஒழுங்கு பின்பற்றப்பட்டது. இலங்கைத் தேசியக் கிறிஸ்தவ சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அருட்திரு எபனேசர் ஜோசப் அவர்கள் அருளுரையாற்றினார்.

வழிபாட்டைத் தொடர்ந்து விற்பனை விழா சபையின் ஐக்கிய முன்றலில் நடைபெற்றது. இவ்விழாவைத் திருமதி வசந்தி ராஜரட்ணம் அவர்கள் நாடா வெட்டித் திறந்து வைத்தார். சபையின் கழகங்கள் ஒவ்வொன்றும் பெருமுயற்சி எடுத்து விற்பனைச் சாலைகளை நடாத்தினர். சபை மக்கள் பலர் வழமையை விட அதிகமாகத் தமது கொடைகளைப் பொருட்களாக சபைப் போதகருக்கூடாக அனுப்பி வைத்திருந்ததை இம்முறை அவதானிக்க முடிந்தது.

## பன்னிரு "பின்பற்று"

*ஆண்டவன் கட்டளையைப் பின்பற்று*
*அறிவை வைத்துப் பின்பற்று*
*வள்ளுவன் குறளைப் பின்பற்று*
*வையகம் ஓங்கப் பின்பற்று*
*கொண்ட மதத்தைப் பின்பற்று*
*குடும்ப உறவைப் பின்பற்று*

*நல்ல வாழ்வைப் பின்பற்று*
*நல்லோர் செயலைப் பின்பற்று*
*அறிஞர் அவையைப் பின்பற்று*
*அன்புடன் இருக்கப் பின்பற்று*
*பொறாமை அகற்றிப் பின்பற்று*
*புண்ணியம் செய்யப் பின்பற்று!*

கிறிஸ்சாந் அஜித்குமார்.

Edited for J.D : C.S.I Colombo Church 17, Frances Road, Colombo - 06. Edited By P.N.Jeyaseelan. Typesetting & Printing RST - 501715